முருகப்பெருமான் துணை

**மகான் ஆண்டாள் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**13.09.2023**, புதன்கிழமை

1. அவதார ஞான தேசிகனே
அண்ணலே ஆறுமுக அரங்கனே
அவனியில் உன் பெருமை கூறி
அறிவிப்பேன் சோபகிருது யாளிதிங்கள்
2. திங்களிலே இருபானேழ்திகதி புந்திவாரம்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 27 ம் நாள், 13.09.2023, புதன்கிழமை)
தேசிகனுக்கு அறிவுரை ஆசிதனை
இங்கனமே ஆண்டாள் யானும்
இயம்பிடுவேன் உலக நலம் காண
3. காணவே அருட்தயவு சன்மார்க்க
கந்தவேலன் ஞான வழிதனை
ஞானமாக உலகோர் ஏற்று
நம்பிக்கை வைத்து வருதல் காண
4. காணவே உலகம் எங்கிலும்
கந்த வேலனை போற்றுகின்ற
ஞானப்படைகளாக மாறியே
நாட்டிடுவேன் உலகமாற்றம் சார்ந்த
5. சார்ந்த சேவைகள் தானும்
சன்மார்க்க வழியில் வளர்ந்து
சார்ந்து உலகமெலாம் தொண்டர்கள்
சாற்றிடுவேன் அரங்கமகான் சீடர்களாக
6. ஆகவே மாற்றம் மிகுதி கண்டு
அறிவிப்பேன் தரும ஞான பலம்
மிகுந்து ஆளுமைகளும் அஞ்ச
மேலான படைகள் ஆகி

7. ஆகியே ஆளுமைதனையே மாற்றும்
ஆறுமுகப்பெருமான் படைகளாக
அகிலமெங்கிலும் நிரம்பி இனிதே
ஆளுமையே ஞானபலமாக அமையும்

8. அமையவே அரங்கன் அவதாரம்
ஆறுமுகனார் சூட்சுமமாக இருக்க
அமைந்திடும் ஞான ஆட்சிகாலத்தில்
அனைவரும் பங்குபெற்றிட

9. பெற்றிட பிரணவக் குடிலினை
புகலுவேன் சரணாகதி கொண்டு
ஆற்றல்பட அரங்கமகானை அனுகி
ஆறுமுகனாராக அரங்கன் தரும்

10. தருகின்ற தீட்சை பலவும் ஏற்று
தனிப்பெருஞ்சக்தி பெருகிட
தருமத்தையும் கையில் எடுத்து
தட்டாது உலகெல்லாம் செய்து

11. செய்துமே சேவை பெருக்கி
செயல்வடிவாக எங்கும் அரங்கன்
மெய்ஞானம் பரவி மாற்றம்
முருகப்பெருமான் அருளாக நடந்தேறும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—